முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1465

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.10.2023,** செவ்வாய்கிழமை

1. பரம்பொருளே சூட்சும வடிவாக
பரோபகாரம் கொண்டு அரங்கன் அவதாரமாக
வரம்பல பெற்று கலியில் அவதரித்திருக்க
வல்லமைபட வடிவேலன் யானும் அரங்கன் கேட்க இனிதே
2. இனிதே ஞான அறிவுரை ஆசி
இயம்பிடுவேன் சோபகிருது நங்கை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 16 ம் நாள், 03.10.2023, செவ்வாய்கிழமை)
கனிவேலவன் என் சக்திகொண்ட அரங்கனே
கலியின் சிறந்த ஞானியாகும்
3. ஞானியரின் உண்மை வழிகளை
நம்பிக்கைகொண்டு மக்கள் தொடர்ந்தேற்று வந்தால்
ஞானிகள் ஆகும் வாய்ப்பும்
ஞான ஆட்சி தருகின்ற சூழலும் கலியினில் கனியும்
4. கனியவே அரங்கன் தர்மத்தை
கட்டளையாக உலகோர் ஏற்று
துணிவுபட உலகமெங்கும் கிளைகள்
துவக்கி உயர்வாக செய்து வரவேண்டும்
5. வேண்டிவேண்டி அரங்கன் நாமஜெபத்தை
விடாது ஞானமாக ஏற்று ஜெபதபங்கள் புரிந்தால்
உண்டாகும் உலக மாற்றம் சடுதி
உயர்வான ஞானிகள் படையாக உலகோரிடை சக்திமாற்றம் கண்டு
6. கண்டுமே கலியில் ஞான ஆட்சியும்
கந்தவேலன் யான் வெளிப்பட இனிதே
துணிவுமிக்க ஞானவான்கள் தலைமையோடு
தூய அதிகாரிகள் வர்க்கங்கள் பெருகி

7. எங்கும் களவு கயமை
ஊழல் இல்லாத லஞ்ச லாவண்யமில்லாத
ஆட்சிக் காலமாக உலகம்
சடுதி தேறக் கூடும்

8. ஆகவே அரங்கன் வழிவந்து
அறத்தை முறையே பயின்று
வரங்கள் தருகின்ற வள்ளல் தர்ம நெறியை
வழிமொழிந்து ஏற்று உலகமெல்லாம் செய்ய

9. செய்யவே சடுதி மாற்றம் உண்டு
சிவராஜயோகி அரங்கனால் ஐயமற
எல்லா காரிய சித்தியும் உண்டாகும்
அறிவித்த ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—